අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# நாடகமும் அரங்கியலும்

## வினாத்தாள் I & II



The National e-learning Portal for The General Education

Nenasa

தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு**

| 51 | T | I, II |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

**நாடகமும் அரங்கியலும் - I, II** | **நேரம் : 3 மணித்தியாலம்**

**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**

வினாக்களை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## நாடகமும் அரங்கியலும் - I

**கவனிக்க :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* ***1*** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
* **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றை பின்பற்றுக.

1. அரங்கின் பிரதான மூலக்கூறுகளில் ஒன்று
   (1) நடிகன் (2) நெறியாளன் (3) நாடகாசிரியன் (4) காட்சியமைப்பாளன்

2. நாடகம் ஆற்றுகை செய்யப்படும் போது இடம்பெறுவது
   (1) கதைகூறல் (2) நிகழ்த்திக் காட்டுதல்
   (3) விமர்சனத்தை ஏற்றல் (4) சொல்லாடல் இடம்பெறல்

3. ஆற்றுகைக் கலையில் இடம் பெறும் தொடர்பாடல்
   (1)மறைமுகமானது (2) நிலையானது (3) நேரடியானது (4) ஒரு வழியானது

4. நாடகத்தில் பாத்திரங்களது செயல்களைத் தீர்மானிப்பதற்கு காரணமாக அமைவது
   (1) காட்சி (2) மோடி (3) உணர்வு (4) சூழமைவு

5. இலங்கைத் தமிழரின் பாரம்பரிய அரங்க வெளியாக அமைவது
   (1) களத்து மேடு (2) வட்ட அரங்கு (3) வட்டக்களரி (4) படச்சட்ட அரங்கு

6. பின்வருவனவற்றுள் ஆற்றுகைக் கலையாக அமைவது
   (1) வில்லுப்பாட்டு (2) சிற்பம் (3) ஓவியம் (4) இலக்கியம்

7. நாடகத்தின் செய்தி வெளிப்படும் முறை
   (1) ஆடல் (2) பாடல் (3) காட்சி (4) சொல்லாடல்

8. தயாரிப்பாளருக்கான தகமையாக அமைவது
   (1) படைப்பாக்கத்திறன் (2) விமர்சனத்திறன்
   (3) கற்பனைத்திறன் (4) நிர்வாகத்திறன்

9. பார்ப்போருக்கு வாழ்வு சார்ந்த நம்பகத்தன்மையை அளிக்கும் காட்சியமைப்பு
(1) யதார்த்தக் காட்சியமைப்பு (2) குறியீட்டுக் காட்சியமைப்பு
(3) மனோரதியக் காட்சியமைப்பு (4) மோடிமைக் காட்சியமைப்பு

10. இசையில் விசேட விளைவுகளைப் பிறப்பிக்க உதவுவது
(1) வீணை (2) சிரட்டை (3) பறை (4) தம்புரா

11. மேடை முழுவதும் ஒளியூட்டப் பயன்படுவது
(1) பொட்டொளி (2) பரப்பொளி (3) கீற்றொளி (4) பெருக்கொளி

12. மண் சுமந்த மேனியர் நாடகத்தை எழுதியவர்
(1) க.சிதம்பரநாதன் (2) சி.மௌனகுரு
(3) அம்பி (4) குழந்தை ம.சண்முகலிங்கம்

13. நாடகம் ஒன்றில் படைப்பாக்க அசைவுகளைத் தீர்மானிப்பவர்
(1) நெறியாளர் (2) நடிகன்
(3) வேடஉடை ஒப்பனையாளர் (4) இசையமைப்பாளர்

14. உடல் உள ஒத்திசைவிற்கு உதவுவது
(1) செல்லாடலை மேற்கொள்ளல் (2) தாளத்திற்கு அசைதல்
(3) காட்சியமைத்தல் (4) விமர்சனம் கூறல்

15. புதிதளித்தலுக்கு அவசியமானது
(1) கருத்தூன்றல் (2) அவதானம் (3) படைப்பாக்கம் (4) கற்பனை

16. தோணி எனும் சிறுகதையின் ஆசிரியர்
(1) அ.செ.முருகானந்தம் (2) வ.அ.இராசரத்தினம்
(3) கோகிலா மகேந்திரன் (4) சட்டநாதன்

17. எழுத்துருவில் மையமாக அமைவது
(1) கரு (2) பாத்திரம் (3) மோதுகை (4) காட்சி

18. பாத்திரச் சித்திரிப்பை முக்கியப்படுத்துவது
(1) இசை (2) காட்சியமைப்பு (3) ஒப்பனை (4) ஒளி

19. பிறமொழி பேசும் பார்வையாளர்களும் புரிந்துகொள்ளக்கூடிய நாடக வகை
(1) இசை நாடகம் (2) கூத்து
(3) ஊமம் (4) சொல்லாடல் அரங்கு

20. நெறியாளர் ஒருவர் நாடக எழுத்துருவினை விளங்கிக் கொள்ளும் செயற்பாடு
(1) திட்டமிடல் (2) வியாக்கியானம் (3) ஒத்திகை (4) பகுப்பாய்வு

21. புதியதொரு வீடு நாடகத்தில் கருப்பொருளை வலியுறுத்தும் காட்சி
(1) கோயில் மண்டபம் (2) வீடு
(3) சங்கக்கடை (4) தமிழ்ப்பள்ளி

22. "தங்கச்சி படலை திறக்கிற சத்தம் கேக்குது ஆரெண்டு பார் பிள்ளை" என்ற உரையாடலில் வெளிப்படும் குறிப்பு எதனைச் சார்ந்தது
(1) ஒளி (2) ஒலி (3) வேடஉடை (4) ஒப்பனை

23. பரதம் எவ்வகை ஆடல்

(1) சாஸ்த்திரிய நடனம் (2) கிராமிய நடனம்

(3) மேலைத்தேய நடனம் (4) புத்தாக்க நடனம்

24. மஹாகவி உருத்திரமூர்த்தி எழுதாத நாடகம்

(1) புதியதொருவீடு (2) கோடை

(3) கடூழியம் (4) முற்றிற்று

25. குரல்வழிச் சித்திரிப்பின் போது நடிகனுக்குப் பயன்படக்கூடிய தசைநார்கள்

(1) 3 (2) 4 (3) 5 (4) 6

26. பின்வருவனவற்றுள் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகமாக அமைவது

(1) பொறுத்தது போதும் (2) சுந்தரம் எங்கே

(3) எந்தையும் தாயும் (4) கந்தன் கருணை

27. சமூக மாற்றத்திற்கான அரங்கு என்ற நூலை எழுதியவர்

(1) நா.சுந்தரலிங்கம் (2) க.சிதம்பரநாதன்

(3) இ.சிவானந்தன் (4) சி.மௌனகுரு

28. நடிகனது உடல் தளர்வடைய உதவும் பயிற்சி

(1) கருத்தூன்றல் பயிற்சி (2) சுவாசப் பயிற்சி

(3) அவதானப் பயிற்சி (4) குரல்ப் பயிற்சி

29. தொன்று திகழ்ந்திடு இன்று இலங்கிடு சீர்பெறு யாழ் நகரே என்ற பாடலுக்குரிய நாடக வகை

(1) இசை நாடகம் (2) வசந்தன் கூத்து (3) காமன் கூத்து (4) வடமோடிக் கூத்து

30. ஆரொடுநோகேன் நாடகத்தில் இராசதுரையின் குடும்பத்தினர் மேற்கொள்ளும் செயல்கள் இடம்பெறும் காலம்

(1) காலை (2) நண்பகல் (3) மாலை (4) இரவு

31. ஆரொடுநோகேன் நாடகத்தில் கருப்பொருளைச் சுட்ட உதவும் மேடைப்பொருள்

(1) நிலைக்கண்ணாடி (2) படிப்பு மேசை

(3) சாய்மனைக்கதிரை (4) வாசற்படி

32. ஊர்வலப் பண்பு கொண்ட சடங்கு

(1) குளுர்த்தி (2) மானம்பூ (3)வேட்டைத்திருவிழா (4) கொடியேற்றம்

33. மட்டக்களப்பிற்குரிய தனித்துவமான மரபுவழிக் கூத்து

(1) காத்தவராஜன் கூத்து (2) காமன் கூத்து

(3) கத்தோலிக்கக் கூத்து (4) பறைமேளக் கூத்து

34. பபூன் வேடத்தில் புகழ் பெற்றவர்

(1) பொன்னாலை கிருஸ்ணன் (2) கிருஸ்ணாழ்வார்

(3) வி.வி.வைரமுத்து (4) செல்வரெத்தினம்

35. பார்வையாளர் தமது வசதிக்கேற்ப பார்க்கக்கூடிய நாடக வடிவம்

(1) மேடை நாடகம் (2) தெருவெளி நாடகம்

(3) தொலைக்காட்சி நாடகம் (4) சிறுவர் நாடகம்

- பின்வரும் படங்களை அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடையளியுங்கள்


A


B


C


D


E

36. படம் A குறிக்கும் நாடகாசிரியர்

(1) கவிஞர் இ.முருகையன் (2) அம்பி

(3) மஹாகவி (4) நீலவாணன்

37. படம் B குறிக்கும் உணர்வுநிலை

(1) கோபம் (2) வீரம் (3) பயம் (4) சோகம்

38. படம் C குறிக்கும் காட்சியமைப்பு

(1) குறியீட்டு மோடி (2) மனோரதிய மோடி

(3) யதார்த்தமோடி (4) யதார்த்தவிரோதமோடி

39. படம் D குறிக்கும் நாடகத்திற்குரிய பார்வையாளர்கள்

(1) சிறுவர்கள் (2) சிறுவர்களும் பெரியவர்களும்

(3) வளர்ந்தோர் (4) பொதுப்பார்ப்போர்

40. படம் E குறிக்கும் நெறியாளர்

(1) அ.தாசீசியஸ் (2) சி.மௌனகுரு (3) நா.சுந்தரலிங்கம் (4) க.பாலேந்திரா

**

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு**

| 51 | T | I, II |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

**நாடகமும் அரங்கியலும் - I, II**

**நாடகமும் அரங்கியலும் - II**

**கவனிக்க :**

* **முதலாம்** வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

1. கீழ்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

(i) சின்னச்சின்னக் குருவிகள் என்ற பாடல் இடம்பெற்ற நாடகம் எது? (01 புள்ளி)

(ii) இலங்கைத் தமிழ் அரங்கில் யதார்த்தப் பண்பு கொண்ட நாடகங்களை எழுதியவர்? (01 புள்ளி)

(iii) “பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம்” எனும் நூலை எழுதியவர்? (01 புள்ளி)

(iv) கொம்பு முறித்தல் நிகழ்வு இடம்பெறும் கூத்து? (01 புள்ளி)

(v) சானா சண்முகநாதன் எந்த அரங்கத் துறையில் புகழ் பெற்றவர்? (01 புள்ளி)

(vi) ஆற்றுகை என்ற சஞ்சிகையினை வெளியிடும் நாடக நிறுவனம் எது? (01 புள்ளி)

(vii) மன்னார் கூத்துக்களில் பயன்படுத்தப்படும் கதைகள்? (01 புள்ளி)

(viii) பாடலை முதன்மைப்படுத்தும் தமிழ்ப் பாரம்பரிய அரங்கு யாது? (01 புள்ளி)

(ix) ஒப்பனை மேற்கொள்ளப்படும் முறைகள் இரண்டு தருக? (02 புள்ளிகள்)

(x) அண்ணாவியாரின் பிரதான பணிகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

2.

(i) நாடகக் கலையின் பிரதான பண்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(ii) நாடகம் எவ்வாறு ஆற்றுகைக் கலையாகத் திகழ்கின்றது என்பதனை இனங்காண்க. (06 புள்ளிகள்)

3.

(i) நடிகனுக்கு ஏன் பயிற்சிகள் அவசியமாகின்றது என்பதை இனங்காண்க. (04புள்ளிகள்)

(ii) நடிகனுக்கு வழங்கப்படும் பயிற்சிகளைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒரு பயிற்சி பற்றி விளக்குக. (04புள்ளிகள்)

(iii) நடிகனது தகைமைகளை இனங்கண்டு விளக்குக. (04புள்ளிகள்)

*4.*

(i) *எழுத்துரு ஒன்றில் இடம்பெறும் அம்சங்களைப் பட்டியற்படுத்துக.* *(04 புள்ளிகள்)*

(ii) *ஆரொடு நோகன் நாடக எழுத்துருவில் இருந்து புதியதொரு வீடு நாடக எழுத்துரு எவ்வகையில் வேறுபடுகின்றது என்பதனை விளக்குக.* *(08 புள்ளிகள்)*

*5.*

(i) *நடிபாகம் வழங்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் யாவை?* *(04 புள்ளிகள்)*

(ii) *நாடகத்திற்கான அசைவுகள் பற்றி விளக்குக.* *(04 புள்ளிகள்)*

(iii) *அரங்கத் தயாரிப்பாளரின் பணிகளை விளக்குக.* *(04 புள்ளிகள்)*

*6.* *பின்வரும் அரங்க ஆளுமைகளின் நாடகப் பணிகளை விளக்குக.*

(i) *க.கணபதிப்பிள்ளை*

(ii) *சி.மௌனகுரு*

(iii) *அ.தாசீசியஸ்*

*(04×03 = 12 புள்ளிகள்)*

*7.* *பின்வருவனவற்றுள் எவையேனும்* ***மூன்றிற்கு*** *சிறுகுறிப்பு எழுதுக.*

(i) *காமன்கூத்து*

(ii) *சூரன் போர்*

(iii) *அரங்கில் இசை*

(iv) *நெறியாளரின் கடமைகள்*

(v) *அரங்க விளையாட்டு*

*(04×03 = 12 புள்ளிகள்)*

***